# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2049 • ஜூலை 7, 2018 Weekly E-paper • July 7, 2018


## தமிழக அரசின்

# முதுகெலும்பைக் காணவில்லை!

• சுப.வீரபாண்டியன்



அதிகாரம் ஆளுநருக்கா, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கா என்னும் வினாவிற்கு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னரும் விவாதங்கள் இன்னும் ஓயவில்லை.

கடந்த வாரம், ஐந்து நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு, ஓரிரு பிரிவுகளைத் தவிர்த்து, பெரும்பான்மையான தளங்களில் முடிவு எடுக்கும் அதிகாரம் அரசுகளுக்கே உண்டு என்று தீர்ப்பளித்துள்ளது. எனினும் அந்தத் தீர்ப்பு மிகத் தெளிவானதாகவும், விளக்கமானதாகவும் இல்லை என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. ஆகவே, மத்தியில் ஆளும் அதிகார வெறி கொண்ட பா.ஜ.க.வும், அதன் ஆளுநர்களும் மீண்டும் அந்தச் சிக்கலைக் கையில் எடுத்துக் கொண்டுள்ளனர்.

உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு, தில்லி அரசோடு தொடர்புடையது என்றாலும், அதன் பொதுத் தன்மைகள் எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும் என்பதே சரி. ஆனால், மாநில அரசுகளின் அதிகாரத்திற்கும், யூனியன் பிரதேச அதிகாரங்களுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. யூனியன் பிரதேசங்களுக்குள்ளேயே கூடச் சில வேறுபாடுகளும் இருக்கின்றன.

அரசமைப்புச் சட்டப்படி, கோவா, டையூ, டாமன் போன்ற பகுதிகளுக்கு உள்ள அதிகாரங்கள் மிக மிகக் குறைவு. அதனைவிடத் தில்லிக்குச் சற்றுக் கூடுதல் அதிகாரம் உள்ளது. புதுவை போன்ற இடங்களில் மேலும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழகம் உள்ளிட்ட சட்டமன்றங்களில் ஆளுநர் என்பவர் பெரும்பாலும், அலங்காரப் பதவி (Ceremonial Head) வகிப்பவர் மட்டுமே. ஆனால் இந்த அரசமைப்புச் சட்ட அடிப்படையில், எந்தெந்த மாநிலங்களில் யார் யாருக்கு என்னென்ன அதிகாரம் என்பதை இன்னும் விரிவாக உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்க வேண்டும்.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அதிகாரம் குறைவாக உள்ள தில்லி, புதுவை யூனியன் பிரதேச முதலமைச்சர்கள் ஆளுநரை எதிர்த்துக் குரல் கொடுக்கின்றனர். நீதிமன்றத்திற்கும் செல்கின்றனர். கூடுதல் அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டுள்ள தமிழக அரசோ, அஞ்சி ஒடுங்கி ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ளது. அதனால்தான், எனக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினால் ஏழு ஆண்டுகள் சிறை என்று இங்குள்ள ஆளுநர் ஆணவத்தோடு அறிக்கை விடுகிறார். நாமக்கல்லில் ஆர்ப்பாட்டம் செய்த தி.மு.க.வினரைச் சிறையில் அடைக்கிறது தமிழக அரசு. புதுவையின் துணை ஆளுநரோ, இன்றும் அதே தொனியில் ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்கின்றார்.


SubaVeerapandian
@Suba_Vee

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே அதிகாரம், ஆளுநருக்கு இல்லை என்று உச்ச நீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறி விட்டது. எனினும் இது மட்டும் போதாது. இன்றைய தமிழக அரசுக்குத் தனியாக ஒரு முதுகெலும்பும் "பார்சல்" அனுப்பினால் உதவியாக இருக்கும். #GovernmentvsGovernor

7:06 am - 4 Jul 2018

சட்டம் என்னவாக இருக்கிறது என்பது ஒன்று. அது எப்படி இருக்க வேண்டும் என்பது இன்னொன்று. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு அதிகாரம் இல்லையென்றால், பிறகு தேர்தல் எதற்கு? எல்லா மாநிலங்களிலும் ஆளுநர்களை வைத்து மத்திய அரசே நாட்டை ஆண்டுவிட்டுப் போய்விடலாமே! எனவே அதிகாரங்கள் அரசுகளுக்கே என்பது இன்னும் தெளிவாகக் கூறப்பட வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் அரசமைப்புச் சட்டமும் திருத்தப்பட வேண்டும். அதே வேளையில் என்னதான் விரிவாகக் கூறினாலும், சட்டத்தைத் திருத்தினாலும் எடப்பாடி போன்றவர்களின் தலைமையிலான அரசுகள் நெஞ்சு நிமிர்த்தி ஒருநாளும் செயல்படப் போவதில்லை என்பதும் உண்மை.

இன்றையத் தமிழக அரசுக்கு நீதிமன்றங்கள் அதிகாரத்தை அளித்தால் மட்டும் போதாது, முதுகெலும்பையும் சேர்த்து அனுப்பினால்தான் அவர்களால் நிமிர்ந்து அமர முடியும்! •

# காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவை மீறுகிறது கர்நாடகம்!
# இது நீதிமன்ற அவமதிப்பு!



## பி.ஆர்.பாண்டியன் குற்றச்சாட்டு

தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்
பி.ஆர்.பாண்டியன்

நேர்காணல்: மா.உதயகுமார்



**? காவிரி நதி நீர்ப் பங்கீட்டில் ஆணையம் அமைத்ததை கர்நாடக அரசு ஏற்கமறுக்கிறது. கர்நாடக அனைத்துக் கட்சி கூட்டத்திலும் உச்ச நீதிமன்ற தீர்ப்பை ஏற்காமல் நாடாளுமன்றத்தில் விவாதமாக்கப்பட வேண்டும் என்றும் மீண்டும் மேல் முறையீடு செய்வோம் என்றும் அறிவித்திருப்பது பற்றிய தங்களுடைய கருத்து?**

அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் ஆணையத்தை எதிர்ப்பது குறித்த கருத்தைத் தீர்மானத்தில் அவர்கள் சொல்லவில்லை. நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தல் என்பது பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளார்கள். தனித்த முறையில் முதலமைச்சர் நாடாளுமன்றத்தில் விவாதத்தைக் கிளப்புவோம் என்கிற கருத்தை வெளியிட்டிருக்கிறார். அனைத்துக் கட்சி கூட்டத் தீர்மானம் என்பது உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு மேல் முறையீடு செய்வது, அதுவும் சட்ட ஆலோசகரிடம் கலந்தாலோசித்துவிட்டு மேல் முறையீடு செய்வது என்பதாகவே இருக்கிறது. ஆகவே அது பற்றி நமக்குக் கவலையில்லை.

**? கர்நாடக அரசு காவிரி விவகாரத்தில் தொடர்ந்து ஒத்துழைக்க மறுத்து வருகிறது. பருவகாலத்திற்குள் ஆணையம் அமைக்கப்பட்டு நீர் திறந்து விடப்பட வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பின்பற்றப்படவில்லை. இதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

காவிரியைக் கர்நாடகத்தில் அரசியலாகப் பார்க்கிறார்கள். காங்கிரசாக இருந்தாலும் சரி, பா.ஜ.க வாக இருந்தாலும் சரி கர்நாடகாவிற்கு ஆதரவாகச் சட்டத்திற்கு விரோதமாகத்தான் செயல்படுகின்றனர். இந்தியா என்கிற நாட்டில் உச்ச நீதிமன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கிவிட்டது. தீர்ப்பை கர்நாடகா நிறைவேற்ற வேண்டும். அணைகள் கர்நாடகாவிற்குச் சொந்தம். அணைக்கு வரக்கூடிய தண்ணீரும் காவிரி நதியும் கர்நாடகாவிற்குச் சொந்தமில்லை என்பதைத் தெளிவுபடுத்திவிட்டனர். தண்ணீரின் அளவைக் கணக்கிட்டு, இருக்கின்ற நீரைப் பிரித்துக் கொடுக்கின்ற அதிகாரம் ஆணையத்திற்குத்தான் இருக்கிறது. ஆணையம் தண்ணீரைத் திறந்து விட கர்நாடகா தடை செய்கிறது என்றால் அது நீதிமன்ற அவமதிப்பு. மத்திய அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**? இந்த விவகாரத்தில் தமிழக அரசின் செயல்பாடு சரியான முறையில் இருக்கிறதா?**

தமிழக அரசைப் பொறுத்த வரை சட்டரீதியிலான உரிமையைப் பெற வேண்டும் என்ற முடிவில் சரியான பாதையில் போகிறது. சில நேரங்களில் மந்தமான போக்கு நிலவினால் கூட சட்ட ரீதியாக நல்ல நடைமுறையைப் பின்பற்றுகின்றனர்.

**? மற்ற அரசியல் கட்சியினர் குறிப்பாக எதிர்க்கட்சியான தி.மு.க. நடத்திய போராட்டங்களால் காவிரி விவகாரத்தில் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கக் கூடிய பலன் பற்றி தங்களுடைய கருத்து?**

காவிரி விவகாரத்தில் அனைவரும் ஒன்றாக நின்று ஒத்த கருத்தைக் கூறினோம். அதனால் எல்லா கட்சிகளுக்கும் இதில் பங்கு இருக்கிறது. போராட்டங்களுடைய விளைவுதான் மத்திய அரசு ஆணையத்தை ஏற்படுத்தியது.

**? கர்நாடக அரசு ஆணையத்தின் உத்தரவைப் பின்பற்றாத நிலையில் நம்முடைய விவசாய அமைப்புகளின் செயல் திட்டங்கள் என்ன?**

பிரச்சனைகள் தொடரும். பருவ மழை குறையும் போது பிரச்சனை வரத்தான் செய்யும். அப்பொழுது அரசு சட்டத்திற்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டும். அது மத்திய அரசாக இருந்தாலும் சரி, கர்நாடக அரசாக இருந்தாலும் சரி. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் விவசாயிகள் தனித்த முறையில் போராடி வெற்றி பெற முடியாது. அரசியல் கட்சிகளோடு இணைந்து போராடினால்தான் வெற்றி பெற முடியும்.

**? தமிழ் நாட்டின் பங்கைக் குறைத்துக் கொண்டே சென்று, தற்போது 177.25 TMC ஆக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளின் பிரதிநிதியாக இந்த அளவு எந்த அளவிற்குப் போதுமானதாக இருக்கும்?**

போதுமானதில் 30% கூட இந்த அளவு இல்லை. மிகப் பெரிய துரோகம் தண்ணீரின் அளவைக் குறைத்தது. பல மாவட்டங்களில் காவிரி நீர்தான் குடிநீர். இருக்கின்ற நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் “காய்ச்சலும் பாய்ச்சலும்” முறையைக் கையாளுகிறோம். உரிய காலங்களில், கொடுக்கப்பட்ட தீர்ப்பின் அளவு நீரையாவது வழங்கினால் பருவமழையையும் எங்களுடைய சிக்கனமான முறையைப் பயன்படுத்தியும் சாகுபடியைச் சமாளிக்கலாம்.

**? காவிரி விவகாரத்தில் மற்ற மாநில விவசாயிகளின் நிலைப்பாடு என்ன?**

கர்நாடக விவசாயிகள் சங்கத் தலைவரிடம் பேசும்போது தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் தருவதிலும் ஆணையம் அமைப்பதிலும் எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை என்று தெரிவித்தார். கர்நாடக மாநில விவசாயிகளுடன் இணைந்து முயற்சிகளைத் தொடரலாம் என்று இருக்கிறோம். எங்களிடம் எந்த முரண்பாடும் இல்லை. ●

**சென்னைப் பயிலரங்கம் தேதி மாற்றம்!**



ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

# திண்டுக்கல் அமைப்புக் கூட்டம்



**பே**ரவையின் திண்டுக்கல் மாவட்ட அமைப்புக் கூட்டம் 17 - 18 அன்று காலை 11 மணிக்கு ஒட்டன்சத்திரம் ஒன்றியச் செயலாளர் வடிவேல் அய்யா இல்லத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் சே.தமிழினியன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் கு. ஆனந்தராஜ் வரவேற்புரையாற்றினர். தோழர்கள் புலவர் வீர கலாநிதி, புலேந்திரன், ச.ஞானசேகர், வெ.நடராஜன், வெள்ளைச்சாமி, ச.வடிவேல், ஜெயராம், ஜெயச்சந்திரன், பார்த்திபன்,இராமசாமி, சிவகாமி, ஆசிந் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகள் கூறினர். திண்டுக்கல், நிலக்கோட்டை , ஒட்டன்சத்திரம், பழனி, வேடசந்தூர் ஆகிய பகுதிகளில் “கலைஞர் ஆட்சியும், திராவிடர் எழுச்சியும்” என்ற தலைப்பில் தெருமுனைப் பரப்புரைக் கூட்டங்கள் நடத்துவதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 21.7.18 சனி மாலை திண்டுக்கல் நாகல் நகரில் தெருமுனைப் பரப்புரைக் கூட்டம் நடத்தவும், மாநிலக் கொள்கை பரப்புச் செயலாளர் கி.இரவிசந்திரன் சிறப்புரையாற்றவும் முடிவெடுக்கப்பட்டது. பெரியார் பிஞ்சு அகத்தினி நன்றியுரையாற்றினார்.

# அமெரிக்கா சிகாகோ கருத்தரங்கில் சுபவீ




*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## போராட்டமன்று–அமைதி

உரிமைகளைப் பெறவேண்டுமென்றால், மக்கள் போராடித்தான் ஆக வேண்டும். போராட்டம் மக்களின் வாழ்வுரிமை.

ஆனால் போராட்டமே வாழ்கையாகிப் போனால் என்ன செய்வது?

போராட வேண்டும் என்பது மக்களின் விருப்பமில்லை. அவர்கள் வாழ்க்கையில் போராட்டத்தைத் திணித்துக் கொண்டிருக்கிறது இன்றைய எடப்பாடி அரசு.

- காவிரிப் பிரச்சனை
- நீட் தேர்வு
- சமஸ்கிருத வார விழாவும் இந்தி திணிப்பும்
- பல்கலைக்கழக முறைக்கேடுகள்
- நியூட்ரினோ திட்டம்
- கதிராமங்கலம் ஹைட்ரோ கார்பன் திட்டம்
- தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை துப்பாக்கிச் சூடு
- சேலம் எட்டு வழிச்சாலை

போன்ற மக்களுக்கு எதிரான நிலைபாட்டில் மத்திய, மாநில அரசுகள் முனைப்புக் காட்டுவதால் மக்கள் போராட்டக் களத்திற்கு வருகிறார்கள்.

அரசுக்கு எதிராகக் கருத்துச் சொன்னால் அல்லது பேசினால் கைது நடவடிக்கை என்பது ஜனநாயகம் அல்ல. அது சர்வாதிகாரத்தின் உச்சம்.

சட்டமன்றத்தில் தூத்துக்குடி பற்றிப் பேச அனுமதி மறுக்கிறார் பேரவைத் தலைவர்.

ஆளுநரின் மாநில உரிமை மீறலைத் தட்டிக் கேட்கத் திராணியற்ற அரசாக இருக்கிறது தமிழக எடப்பாடி அரசு.

முதல்வரானாலும் சரி, பிற அமைச்சர்கள் ஆனாலும் சரி ஆளுநருக்குப் பக்கபலமாகப் பேசுவது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கிறார்கள்.

ஸ்டெர்லைட், நியூட்ரினோ, சேலம் எட்டு வழிச் சாலைகள் போன்றவற்றில் கார்ப்பரேட்டுகளுக்குச் சாதகமாக மத்திய அரசு போகிறது, தமிழக அரசின் துணையோடு.

பா.ஜ.க.வுக்குத் தமிழக மக்கள் சாதகமாக இல்லை என்ற காரணத்தால், காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதில் மத்திய அரசு ஆடிய ஆட்டம், நடித்த நாடகம் சொல்லும் தரமன்று.

அதனால் தமிழக டெல்ட்டா மாவட்டங்கள் காய்ந்து கருகிக்கொண்டிருக்கின்றன.

இவைகளைப் பற்றியெல்லாம் கவலை கொள்ளாமல் ‘இம்’ என்றால் கைது, ‘ஏன்’ என்றால் சிறை போன்ற நடவடிக்கைகள் நேர்மையான அரசுக்கு அழகல்ல.

மக்கள் போராட்டம் புரட்சியாக வெடிக்கும்போழுது எத்தனையோ அரசுகள் காணமால் போயிருக்கின்றன, என்பது உலக வரலாறு.

இன்னும் ஓர் ஆண்டுதான் இருக்கிறது.

மத்திய பா.ஜ.க. அரசையும், மாநில அதி.மு.க. அரசையும் தூக்கி எறிய மக்கள் தயாராகிவிட்டார்கள்.

மக்கள் விரும்புவது போராட்டத்தையன்று, அமைதியை!

புயலுக்குப் பின் அமைதி என்பது இயற்கையின் நியதியல்லவா!



அமெரிக்காவில் நடைபெற்ற FETNA நிகழ்ச்சியில் தோழர்கள் சுபவீ, அறிவுமதி உள்ளிட்டோர்.

# மனித உரிமையை நசுக்கும் சட்டங்கள்

● வெற்றிச்செல்வன்



1979 ஆம் ஆண்டு, குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பன்னாட்டு உடன்படிக்கையில் (International Covenant on Civil and Political Rights), இந்திய ஒன்றியம் தன்னை இணைத்துக் கொண்டது. ஒரு நபர் தமது கருத்தைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதைப் பாதுகாக்கும் அம்சங்களைக் கொண்டது இந்த உடன்படிக்கை. ஆனால், இந்தியாவிலுள்ள பல்வேறு சட்டங்கள் கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை நெறிப்பதாகவே உள்ளன. அவற்றில் ஒன்றுதான் சட்டப்பூர்வமற்ற செயல்களைத் தடுக்கும் சட்டம். (Unlawful activities (Prevention) Act, 1967).

இந்திய ஒன்றியத்தின் பிரதமராக இந்திரா காந்தி பதவி வகித்தபோது கொண்டுவரப்பட்ட இச்சட்டம், தற்போது 50 ஆண்டுகளைக் கடந்துள்ளது. இக்காலகட்டத்தில், அச்சட்டத்தால் தூக்கி எறியப்பட்ட மனித உரிமைகள் எண்ணிலடங்கா.

கடந்த ஆண்டு, தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சாய்பாபா, இச்சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டார். “கம்யூனிசச் சித்தாந்தத்தைப் பரப்பினார்” என்பது அவர்மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டு. அதற்கான ஆதாரமாக முன்வைக்கப்பட்டது அவரது மடிக்கணிணியில் இருந்த சில கட்டுரைகள். அவ்வாதாரத்தைக் கொண்டு, அவர் தடை செய்யப்பட்ட மாவோயிச (CPI(ML)) அமைப்புடன் தொடர்பு கொண்டிருந்தார் என நீதிமன்றம் முடிவு செய்தது. வியப்பு என்னவென்றால், பேராசிரியர் சாய்பாபா 90% உடல் செயல்திறன் பாதிக்கப்பட்டு, சக்கர நாற்காலியின் உதவியுடன் வாழ்பவர்.

கடந்த மாதம் 6ஆம் நாள், பீமா கோரிகானில் நடந்த வன்முறை (ஜனவரி 1) தொடர்பாக, ஆறு சமூக ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வன்முறையைத் தூண்டும் நோக்கில் இந்த ஆறு பேரும் பேசியதாக நம்புவதாகக் காவல்துறையினரால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் மிகச் சிலவே.

சட்டப்பூர்வமற்ற அல்லது சட்டத்திற்குப் புறம்பான செயல்கள் எல்லாம் எவை என்று இச்சட்டம் வரையறை செய்கிறது. யாரெல்லாம் இந்திய இறையாண்மைக்கும், பிராந்திய ஒற்றுமைக்கும் எதிராகக் கேள்விகளை முன்வைக்கிறார்களோ அல்லது இந்தியா மீதான பற்றைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் செயல்படுகிறார்களோ அவர்கள் சட்டத்திற்குப் புறம்பானவர்கள் (“disclaims,questions,disrupts or is intended to disrupt the sovereignty and territorial integrity of india”) என்ற ஒரு தெளிவற்ற வரையறையை இச்சட்டம் தருகிறது. இதன்மூலம் அதிகாரத்தில் உள்ளவர்கள், தேசப் பாதுகாப்பு என்ற பெயரில் யாருடைய அடிப்படை உரிமைகளிலும் தலையிடும் பேராபத்தை இச்சட்டம் முன்னிறுத்துகிறது.

தடை செய்யப்பட்ட அமைப்புகளில் ஒரு நபர் உறுப்பினரா என்பதற்கு எந்தவொரு வரையறையையும், விளக்கத்தையும் இச்சட்டம் தரவில்லை. மாறாக, இச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கைகள், புத்தகங்கள் அல்லது இதழ்களை வைத்திருந்தது, தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் கூட்டத்தில் பங்கேற்றது போன்றவற்றையே அமைப்புகளின் உறுப்பினர் என்பதற்கு ஆதாரமாகக் காட்டுகின்றது.


SubaVeerapandian
@Suba_Vee

"சிலை திருடியவர் யாராக இருந்தாலும் தூக்கில் போட வேண்டும்" என்கிறார் ஒரு கட்சியின் தேசியச் செயலாளர். குற்றம் செய்தவர்கள் அதிகமாய்ச் சத்தம் போடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அது உண்மையா திரு ஹெச்.ராஜா? @HRajaBJP #சிலைக்கடத்தல்

7:22 AM · 04 Jul 18

மேலும், வாரண்ட் இல்லாமல் சோதனை செய்வது, கைப்பற்றுவது, கைது செய்வது, குற்றம் சுமத்தப்பட்டவரைக் குற்றப்பத்திரிக்கை (charge sheet) இல்லாமல் 180 நாட்கள் வரை சிறையில் வைத்திருப்பது போன்ற கட்டற்ற அதிகாரங்களைக் காவல்துறைக்கு இச்சட்டம் வழங்கியுள்ளது.

2014 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டவர்களில் 72.2% பேர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்னும் புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது, இது முன்னர் கொண்டு வரப்பட்ட தடா (Terrorist And Disruptive Activities (prevention) act, 1987 (TADA) ), பொடா (Prevention Of Terrorism Act, 2002(POTA) ) போன்ற கொடிய சட்டம் என்பது புலனாகிறது.

உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா என்று ஒருபுறம் சொல்லிக்கொண்டு, இம்மாதிரியான சட்டங்கள் மூலம் குடிமக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்குவது போன்ற கேலிக்கூத்து வேறெதுவும் இருக்க முடியாது.

●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.